# பத்திரிக்கை செய்தி

## பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் சார்பாக, சென்னை பள்ளி மாணவர்கள் அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி மையத்திற்கு கல்வி சுற்றுலா

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையும், சென்னை கிழக்கு ரோட்டரி கிளப்பும் இணைந்து Wings to Fly என்ற திட்டத்தின் மூலம் மாணவ/மாணவியர்களின் அறிவு திறனை வளர்க்கும் வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பலவகையான அறிவியல் சார்ந்த போட்டிகளை நடத்தி மாணவ / மாணவியர்களை அயல்நாடுகளுக்கு கல்வி சுற்றுலாவாக அழைத்து சென்று வருகின்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 6 முதல் 9ம் வகுப்பு பயிலும் மாணவ/ மாணவியர்களின் கல்வி திறனை மேம்படுத்தும் விதமாகவும், பல்நோக்கு பார்வையுடன் செயல்படுத்தும் விதமாக Wings to Fly, Rotary Club of Madras East அமைப்பானது, Talent Hunt Program மூலம் அவர்களுக்கு 3 சுற்றுகளாக அறிவியல் கண்காட்சி போட்டி நடத்தி, இறுதி சுற்றில் தேர்வு பெற்ற சென்னை பள்ளிகளில் பயிலும் 8 மாணவ/ மாணவியர்களை ( மாணவர்கள் 5 பேர், மாணவிகள் 3 பேர்) அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி மையத்திற்கு 04.07.2018 முதல் 14.07.2018 வரை (10 நாட்கள்) கல்வி சுற்றுலாவாக அழைத்து செல்ல தேர்வு செய்யப்பட்டு மாணவ/மாணவியர் பாதுகாப்புடன் பயணம் மேற்கொண்டு நலமுடன் 14.07.2018 அன்று காலை சென்னைக்கு திரும்பி உள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் சார்பாக உதவி கல்வி அலுவலர் திருமதி. T. ரோகினி அவர்களும், Rotary Club of Madras East, Wings to Fly அமைப்பின் சார்பாக இரண்டு உறுப்பினர்களும் மாணவ/மாணவியர்களின் பாதுகாப்பு நலன் கருதி உடன் சென்றனர். நலமுடன் திரும்பி வந்துள்ளனர்.

இக்குழுவானது ( 8 மாணவியர்கள், உதவி கல்வி அலுவலர் மற்றும் Rotary Club of Madras East உறுப்பினர்கள் ) 14.07.2018 அன்று காலை நாசா விண்வெளி மையத்தை பார்வையிட்ட களிப்புடன் அனைத்து விதமான பயனுள்ள தகவல்களை பெற்று உற்சாகமாக சென்னை திரும்பினர். இவர்களை பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறை அலுவலர்கள் இனிதே வரவேற்று வாழ்த்துக்களை தெரிவித்தனர்.